ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1970/13 - 2016 ජූනි මස 08 වැනි බදාදා - 2016.06.08

1970/13 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 08 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம்**
**(அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக் கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தில், ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலே, வலஸ்முல்லை பிரதேச செயலாளர் பிரிவிலே, ஸபுதந்திரி கந்த கிராம அலுவலர் பிரிவிலே, அ.க.பீ.51-க்கு உரிய காணியின் விபரம் பின்வருமாறு.

**துண்டு இல. 266**

காணியின் பெயர்: புராண வயல்; விபரம்: காணியில் உள்ள கட்டிடங்கள் இரண்டு, சமய வழிபாடு செய்யும் கட்டிடம் ஒன்று, மலசல கூடம் மூன்றும் உள்ளது; உரிமை கோருபவர்: வராபிடிய ரம்மல கிராமத்தில் கே. எஸ். அட்வின், எச். ஏ. நிகுலஸ், டபிள்யூ. ஏ. கருணாசேன, கே. சார்லிஸ், எச். பியசேன, எச். ஏ. குணபால, பீ. பீ. குணபால ஆகியோர்; விஸ்தீரணம்: 0.1267 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு, வலஸ்முல்லை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

என்.கே.ஆர். பதிரண,
பிரதேச செயலாளர்,
வலஸ்முல்லை.

பிரதேச செயலகம்,
வலஸ்முல்லை,
2016, ஏப்பிறல் 22.

6 - 751

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.